நாள் 02.07.2026 CC 19/2021 அ.சா. 3

பெயர் பழநி த/பெ.காளிவன்னியர்

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) நான் 15.07.1991 ம் தேதி பணியில் சேர்ந்து 32 வருடங்கள் பணியில் இருந்தேன். கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பற்றி தெரியும். நான் 30.04.2022 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். எனது அலுவலக நேரம் காலை 09.00 மணி முதல் மாலை 05.00–06.00 மணி வரை இருப்பேன். கிராம நிர்வாக அலுவலகத்திற்கும், சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் சுமார் 4 கி.மீ தூரம் இருக்குமா என்றால் இல்லை ½ கிலோ மீட்டருக்குள் தான் இருக்கும். கிராம நிர்வாக அலுவலகத்தில் movement register பராமரித்தேனா என்றால் ஞாபகம் இல்லை. movement register பராமரிக்க வேண்டும் என்ற விதி உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் எனது அலுவலகத்தில் movement register பராமரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

(2) வழக்குப் பற்றி எனக்கு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் மதியம் 02.00 மணிக்கு தெரியும். எனக்கு கிராம நிர்வாக அலுவலர் தகவல் சொன்னார். அவரை போலீசார் போன் மூலம் அழைத்ததாக சொன்னார். எங்களது துறை சாராத வேலைக்கு செல்லும்போது உயர் அதிகாரிகளிடம் அனுமதி வாங்க வேண்டும் என்றால் சரிதான். அன்றைய தினம் உயர் அதிகாரிகளிடம் கிராம நிர்வாக அலுவலர் அனுமதி வாங்கினாரா என்று ஞாபகம் இல்லை. அனுமதி பெற்றிருந்தால் போலீசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றும் அனுமதி வாங்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(3) தகவல் வாய் மொழியாக அல்லது எழுத்து மூலமாக கிடைக்கப்பெற்றதா என்றால் போன் மூலம் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது போலீசார் அங்கு இருந்தார்கள். நான் செல்லும் போது ஏற்கனவே வரைபடம் தயார் செய்து

வைத்திருந்தார்கள் அதில் நான் கையெழுத்து போட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு நான் 02.00 மணிக்கு சென்றேன். அந்த இடத்தில் வேடிக்கை பார்ப்பதற்காக பொது மக்கள் இருந்தார்கள் என்றால் இல்லை அது ஊரை விட்டு தள்ளி இருந்தது. என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் அட்டை பெட்டியின் வண்ணம் மற்றும் உள்ளே என்ன இருந்தது என்பது பற்றி விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(4) நான் முதல் விசாரணையில் கைப்பற்றப்பட்ட நேரம் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. அட்டை பெட்டியை நான் தொடவில்லை என்றால் சரிதான். அட்டை பெட்டியை பார்த்தேனா என்றால் பார்த்தேன். திறந்து பார்த்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து என் முன்னிலையில் எந்த சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டுவிட்டு போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:38:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்